மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உண்மையல்ல. கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் ஹையர் கிரேடு உடற்பயிற்சி ஆசிரியர் களுக்கு மற்ற இலாகாவில் கொடுக்கப்படும் சம்பள விகிதப்படி கொடுக்கும்படி அரசு ஆணை (பலவகை) எண். 681, சமூக நலம், நாள் 30—7—1973-ன் கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வைகைக் கால்வாய் சீரமைப்பு

* 264 வினு—**திரு. த. சோணையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில், வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்ட வேலைக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(இ) இவ் வேலை எந்த ஆண்டு முடிவடையும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ரூ. 100 லட்சம்.

(இ) இவ் வேலை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மத்திய காலத்தில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. த. சோணையா : இத் திட்டம் ஏறத்தாழ பத்து பதினைந்து ஆண்டுகளாகவே நீடித்துக் கொண்டேயிருக்கிறது. இராமநாத புரம் மாவட்ட மக்கள் இதை வேகமாக எதிர்பார்க்கிறார்கள். ஆகவே அரசு இதை உடனடியாக முடிப்பதற்கு இன்னும் தீவிர மாக முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திட்டத்தைத் தீவிரமாக ஆக்குவதற்குத்தான் 1973-74-ல் 100 லட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நடப்பாண்டில் அத் திட்டத் திற்காக ரூபாய் 6.85 லட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

வைகை ஆயக்கட்டின்கீழ் உள்ள கண்மாய்கள்

* 265 வினு—**திரு. த. சோணையா :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக் கட்டில் சேர்க்கப்பட்டிருந்தது இப்பொழுது விடுபட்டுள்ளதா?

1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இக் கண்மாய்கள் வைகை ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டவையல்ல.

திரு. த. சோனையா: வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டத்தின்மூலம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கண்மாய்கள் பெரும்பாலும், நீர் கிடைக்கும் கண்மாய்கள் எல்லாம், இதைச் சுற்றி இருப்பதால் இடையில் இந்த மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் எப்படியோ விடுப்பட்டு விட்டன. எனவே, சீரமைப்புத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருகிற போது இந்த மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்களை வைகை ஆயக்கட்டில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசிடம் இருக்கிற தகவல்படி இவை வைகை ஆயக்கட்டில் வருபவை அல்ல, கிருதமால் நதியிலிருந்து வருகிற கண்மாய்களைச் சேர்ந்தவையாகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: வைகை திட்டம், கிருதமால் நதித் திட்டம் இவற்றில் சில கண்மாய்கள் இந்த லிஸ்டத்தில் சேர்க்கப்படாமல் இருந்தவைகளை சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று இரு மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிலும் தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். அவை பரிசீலனை செய்யப்படுகிறதா? கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னதுமாதிரி சில கண்மாய்கள் விடுபட்டிருக்கின்றன. திருமங்கலம், திருப்புவனத்திலும் அப்படி இருக்கின்றன. அவற்றை லிஸ்டத்தில் சேர்க்கக்கூடிய ஏற்பாடுகள் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்னிடமுள்ள தகவல்படி அந்தக் கண்மாய்கள் வைகை ஆயக்கட்டில் வரவில்லை யென்று தெரிவித்தேன். ஏதாவது கண்மாய்கள் விடுபட்டிருந்தால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் அவைபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. த. சோனையா: இந்த மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக்கட்டிலிருந்து எப்படியோ விடுபட்டிருக்கின்றன. எனவே அந்தக் கண்மாய்களை மீண்டும் வைகை ஆயக்கட்டில் சேர்த்துக் கொள்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மறுமுறையும் சொல்கிறேன். என்னிடமுள்ள தகவல்படி அவை வைகை ஆயக்கட்டின் கீழ் வருபவை அல்ல. கிருதமால் நதியிலிருந்து வருகிற கண்மாய்களைச் சேர்ந்தவை என்று தகவல் இருக்கிறது. ஆனால் உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது தகவல் இருந்து அதைத் தெரிவித்தால் அரசு பரிசீலிக்கும்.

* 266 வினா—**திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், ராங்கன் கண்மாயை வைகை ஆயக்கட்டில் சேர்க்கக் கோரி விவசாயிகளிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் அண்மையில் அரசிற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : ஏற்கனவே மேலவெள்ளூர், மாங்குடி கண்மாய்கள் வைகை ஆயக்கட்டிலிருந்து விடுபட்டுப் போயிருக்கின்றன. எனவே அமைச்சர் அவர்கள் அந்தக் கண்மாய்களை வைகை ஆயக்கட்டில் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இதுபற்றி உறுப்பினர் அவர்கள் விவரமாக எழுதியனுப்பினால் அரசு பரிசீலிக்கும்.

Seepage Harnessing Scheme in Bhavani taluk

* 267 *Q.*—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Seepage Harnessing Scheme at Lower Bhavani Project area **கூத்தாடிபாளையம் பள்ளம் திட்டம்** in Bhavani taluk is in progress ; and

(*b*) if so, the present stage thereof ?